## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.67/2017

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : பாப்பா முத்தையா | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : ஆசிரியர் ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**27.03.2025**

**<u>பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

6. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 5 கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால் என்னிடம் உள்ளது. அசல் ஆவணத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் 3 பேரிடம் இருந்து நான் கிரையம் வாங்கினேன். எனவே நான் கைவசம் வைத்துள்ளேன். 08.01.2001ல் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் வாதிகள் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் அவர்கள் அந்த சமயம் இளவர்கள் என சொன்னார்கள். பி.வா.சா.ஆ 5 கிரைய ஆவண தேதியில் வாதிகளின் வயது தோராயமாக என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. மூர்த்தி கிரையம் கொடுத்த சொத்து குப்பம்மாளுடையது என்றால் சரிதான்.

7. குப்பம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 5 ஆவணம் எழுதும்போது வாதிகள் இளவர்கள் என்பதை காட்டவும் குப்பம்மாளின் வாரிசுகளை யார் என்பதை காட்டவும் ஏதாவது ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. அவ்வாறு வாதிகள் இளவர்கள் என்பதை காட்டவோ குப்பம்மாளின் வாரிசுகளை யார் என்பதை காட்டவோ ஆவணம் எதுவும் என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. வாதிகள் இளவர்கள் என்பதை காட்டவும் குப்பம்மாளின் வாரிசுகளை யார் என்பதை காட்டவும் ஆவணம் எதுவும் உள்ளதா என்று நான் மூர்த்தி என்பவரிடம் நான் கேட்டேனா என்றால் இல்லை.

8. பி.வா.சா.ஆ 5 ஆவணம் எழுதும்போது குப்பம்மாள் பெயரில் இருந்த பட்டா

எண்.100 ஐ பார்த்தேனா என்றால் பட்டாவையும், வில்லங்க சான்றிதழையும் பார்த்தேன். நான் பட்டா அசல் ஆவணத்தை கிரையம் கொடுத்தவர்களிடம் இருந்து வாங்கினேனா என்றால் இல்லை. ஆவணத்தை பார்த்தேன். வாதிகள் வழக்கை எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதிகளிடம் என்ன ஆவணம் உள்ளது என்றால் அவர்கள் பாட்டி உயில் எழுதி வைத்து சென்றுள்ளார்கள் என்று வழக்கறிஞர் சொன்னார்.

9. உயிலில் என்ன உள்ளது என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. குப்பம்மாளின் குமாரர்களுக்கோ, குமாரத்திகளுக்கோ அவர்களது வாரிசுகளுக்கோ எந்த உரிமையும் இல்லை என்று உயிலில் சொல்லப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் உயிலை பற்றி தெரியாது. குப்பம்மாளின் குமாரர்களுக்கோ, குமாரத்திகளுக்கோ அவர்களது வாரிசுகளுக்கோ எந்த உரிமையும் இல்லை என்று உயிலில் சொல்லப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 1ன் உயிலின்படி மூர்த்திக்கு கிரையம் கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றால் உயிலை நான் பார்க்கவில்லை.

10. குப்பம்மாளின் பௌத்திரர்களான வாதிகளுக்குதான் உரிமையுள்ளது என்றாலும் வா.சா.ஆ 1ன் உயிலின்படி மூர்த்திக்கு கிரையம் கொடுக்க எந்த உரிமையும் இல்லை என்றாலும் உயிலை நான் பார்க்கவில்லை. பி.வா.சா.ஆ 5 கிரைய ஆவணத்தில் வாதிகளை இளவர்கள் என்று எதற்காக காட்டியுள்ளேன் என்றால் பொதுவாக ஒருவரிடம் வாங்கும்போது அவருக்கு சிறு குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு காப்பாளர் என்று காட்டி எழுதப்படும். அந்த அடிப்படையில் மூர்த்தியை காப்பாளராக காட்டியுள்ளோம். வாதிகளை எதற்காக குறிப்பாக அந்த ஆவணத்தில் காட்டியுள்ளோம் என்றால் அவர்கள் இருவரும் தனது பிள்ளைகள் என்று மூர்த்தி காட்டி அவரை காப்பாளராக எழுதியுள்ளார்.

11. சொத்தை நான் கிரையம் வாங்கும்போது வாதிகள் இளவர்கள் என்பதால் நீதிமன்றம் மூலம் அனுமதி பெற்று கிரையம் வாங்கினேனா என்றால் அப்போது அந்த வழக்கம் இல்லை. எனவே நான் செய்யவில்லை. தாவா சொத்தின் முழு உரிமையாளரே வாதிகள்தான் என்றாலும் நான் நீதிமன்றத்தில் இருந்து அனுமதி பெற்றுதான் கிரையம் வாங்கியிருக்க வேண்டும் என்றாலும் நான் கிரையம் வாங்கிய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல.

12. இந்த உயில் பற்றி தெரிய வந்த பின்பாவது வழக்கு சொத்தின் உரிமை விளம்புகை கேட்டு நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 1 உயில் செல்லாது என நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 தீர்ப்புரை அசிங்கமாக பேசியது திட்டியது தொடர்பானது என்றாலும் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லை என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ 5 ன் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட பி.வா.சா.ஆ 1, பி.வா.சா.ஆ 2, பி.வா.சா.ஆ 3, பி.வா.சா.ஆ 6 ஆவணங்கள் அனைத்தும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 18.03.1994 ல் எழுதப்பட்ட வா.சா.ஆ 1 ஆவணம் குப்பம்மாள் இறந்த பின்பு நடைமுறைக்கு வந்துவிட்டது என்றாலும் வாதிகள் தான் வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் என்றாலும் சரியல்ல.

13. வா.சா.ஆ 1 ன்படி வாதிகள் உரிய வயது அடைந்தவுடன் வழக்கு சொத்தின் உரிமை அடைந்துவிட்டார்கள் என்றாலும் எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் கோரியப்படி வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)